AUGUST 2025

www.balamandir.org

மலர்-2 இதழ்-5

MALARUM MOTTUKKAL

பால மந்திர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்

காமராஜர் நாள் கொண்டாட்டம்



தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், கல்விக்காக போராடியவருமான திரு. கே. காமராஜரின் பிறந்தநாள், ஜூலை **15** ஆம் தேதி "கல்வி நாளாக" கொண்டாடப்படுகிறது. பால மந்திரிலும் இந்நாள் மிக முக்கியமானதாகும். ஏனெனில், பால மந்திரின் உருவாக்கத்திற்கு வித்திட்டது இவரின் கனவே. இன்றளவும் இவரது கொள்கைகளை பால மந்திர் பின்பற்றி வருகிறது.

இவ்வாண்டு, பால மந்திரில் நடைபெற்ற காமராஜர் நாள் விழாவிற்கு விருந்தினராக, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி மற்றும் தற்போதைய **TVS** ஸ்ரீனிவாசன் சேவை நிறுவனத்தின் கல்வி ஆலோசகரான டாக்டர் ஆர். பாலகுமார் பங்கேற்றார். பால மந்திர் வித்யாலயா தொடக்கப்பள்ளி மாணவர்கள், காமராஜரின் வாழ்க்கை மற்றும் தியாகங்களை வெளிப்படுத்தும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை அரங்கேற்றினர். அதோடு, அவரின் வாழ்க்கையைப் பற்றிய சிறப்புரை வழங்கப்பட்டது.







விழா விருந்தினர் தனது உரையில், காமராஜரின் மறக்கமுடியாத கொள்கைகள் பற்றியும், கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் கூறினார். "ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் கல்வியே மாற்றத்தை உருவாக்கும் கருவி" என்ற காமராஜரின் நம்பிக்கையை அவர் மீண்டும் நினைவூட்டினார்.



KNOW ABOUT YOUR SOCIAL WORKER



திருமதி பெர்மி அனன்சியா பிரியதர்ஷினி, **2024** ஜூன் மாதம் முதல் பால மந்திரில் சமூகப்பணியாளராக பணிபுரிகிறார். பொறியியல் பட்டப்படிப்பை முடித்த பிறகு மூன்று ஆண்டுகள் காக்னிசன்ட் டெக்னாலஜி சொலூயூஷன்ஸில் பணிபுரிந்தார். பின்னர் தனது உண்மையான ஆர்வத்தை சமூகப்பணியில் கண்டறிந்து, சமூகப்பணியில் முதுநிலை பட்டம் பெற்றார். வாசிப்பில் ஆர்வமுள்ள இவர், குழந்தைகளுடன் இணைந்து செயல்படுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறார். தற்போது திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களுக்கு சமூகப்பணியாளராகப் பொறுப்பு வகிக்கிறார்.

ANNUAL TEAM MEETING

பால மந்திரின் சமூகப்பணியாளர்கள், களப்பணியாளராகவோ அல்லது வீட்டில் இருந்து பணிபுரிபவராகவோ இருப்பதால், அடிக்கடி நேரடியாகச் சந்தித்து கலந்தாலோசிப்பதரக்கான வாய்ப்புகள் இல்லை. இதனால் ஜூலை மாதம் **25** மற்றும் **26** ஆம் தேதிகளில் நேரடி குழுக்கூட்டம் நடைபெற்றது.

KINSHIP CARE

பால மந்திரின் கின்ஷிப் கேர் திட்டம் தற்போது 1026 குடும்பங்களில் இருந்து 1814 குழந்தைகளுக்கு பல்வேறு மாவட்டங்களில் சேவை அளித்து வருகிறது.







மேலாண்மை குழுவினர், சமூகப்பணியாளர்கள் மற்றும் இணை அமைப்புகள் அனைவரும் ஒன்று கூடிச் சென்றாண்டின் முன்னேற்றத்தைப் பரிசீலித்து, எதிர்காலத்திற்கு வித்திட இது ஒரு வாய்ப்பாக அமைந்தது.





கடந்த ஆண்டில் கின்ஷிப் கேரில் நிகழ்ந்த நிகழ்வுகள் குறித்த ஒரு முன்னோட்டம் வழங்கப்பட்டது. முக்கியமாக, பணியாளர்கள் மற்றும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரிப்பு, **KC**-யின் விரிவாக்கம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்தது. குழந்தைகளின் வளர்ச்சியை தொடர்ந்து கண்காணிக்கும் நோக்கில், **"Thrive Framework"** அடிப்படையில் உருவாக்கப்பட்ட **"Individual Care Plan (ICP)"** சமூகப்பணியாளர்களுக்கு விளக்கப்பட்டது. இது தற்போது **"Dhruva"**- வில் இணைக்கப்பட்டுள்ளது.

120 குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகளின்படி, சமூகப் பணியாளர்களின் தொடர்ச்சியான ஈடுபாட்டினால் **KC** தாய்மார்கள் மற்றும் குழந்தைகளிடம் முன்னேற்றம் பெரிதும் ஏற்பட்டுள்ளதாக **kc** குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.
சமூக பணியாளர்கள் குழுக்களாக பிரிந்து, பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற பின்வரும் செயல் திட்டங்களை உருவாக்கினர்.







பள்ளிகள்: பள்ளி ஆசிரியர்களை **KC**-யின் முக்கிய நிகழ்வுகளில் இணைத்தல், தொடர்பை மேம்படுத்தல் மற்றும் பள்ளிகளுக்கான மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தல்.



அரசு துறைகள்: **KC** திட்டம் குறித்த முறையான தகவல்கள் வழங்குதல், அதிகாரபூர்வ அழைப்புகளை அனுப்புதல் மற்றும் குடும்பங்கள் நலத்திட்டங்களைப் பெறுகிறார்களா என்பதை கண்காணித்தல்.



தொண்டு நிறுவனங்கள் **(NGOs):** கல்வி, தொழில் வளர்ச்சிக்காக பணிபுரியும் மற்ற தொண்டு நிறுவனங்களுடன் கூட்டமைத்தல், உரையாடுதல் மற்றும் உறவு மேம்படுத்துதல்.

இந்த செயல்திட்டங்கள் முக்கிய துறைகளுடன் வலுவான உறவுகளை ஏற்ப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் குடும்பத்திற்கும் வலுவான அமைப்பை ஏற்ப்படுத்துவதே இதன் நோக்கம்.







கின்ஷிப் கேருடன் இணைந்து செயல்படும் தொண்டு நிறுவனங்கள் கல்வி, வழிகாட்டல் மற்றும் குழந்தை வளர்ச்சியில் தங்களின் சிறந்த பணிகளை **kc** குழுவினரிடம் பகிர்ந்தனர்.

இவ்வாண்டின் திட்டங்களாக குடும்பங்களுடன் உறவை மேம்படுத்துதல், பள்ளி மற்றும் **NGO-** களுடன் இணைப்பை உருவாக்குதல், மற்றும் தேவையான குடும்பங்களுக்கு ஆலோசனை சேவைகளை அறிமுகப்படுத்துதல் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆண்டு கூட்டம், குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் முழுமையான வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்ற உறுதியுடன் நிறைவடைந்தது.



KMK வகுப்புகள்

பல குழந்தைகள் கணிதத்தை எதிரியாகவே கருதுகின்றனர். பலர் கணித திறன் பிரச்சனையால் மதிப்பெண்கள் எடுப்பதில் சிரமப்படுகிறார்கள். சிரமப்படும் **7** ஆம் வகுப்பு மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, "கை மேல் கல்வி" எனும் அடிப்படை கணித திறன் திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். இத்திட்டத்தில், குழந்தைகளுக்கு டேப்லெட் வழங்கப்பட்டு, அதில் **Math Star** செயலியைப் பயன்படுத்தி கணிதம் எளிதாகவும் சுவாரஸ்யமாகவும் கற்றுக்கொள்ளப்படுகிறது. திட்டத்தில் உள்ள மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வகுப்புகளில் பங்கேற்று தங்கள் திறன்களை மேம்படுத்தி வருகின்றனர்.

அருணோதயா வழிகாட்டுதல்

இளம் பருவத்தினர் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கு சரியான, நிதானமான வழிகாட்டுதல் தேவை. பல வளர் இளம் குழந்தைகளுக்கு அவர்களுக்கு தேவையான நேரத்தில் வழிகாட்டுதல் கிடைப்பதில்லை. இதன் விளைவாக, அவர்கள் தவறான நட்புகளிலும், பாதகமான உறவுகளிலும் சிக்கிக் கொள்கின்றனர். இதை தவிர்க்க, பால மந்திரின் கின்ஷிப் திட்டம், அருணோதயாவுடன் இணைந்து ஒரு வழிகாட்டல் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

10 ஆம் வகுப்பு மாணவர்கள் அருணோதயாவின் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் வாழ்க்கைத்திறன்கள் மற்றும் வளர் இளம் பருவ சவால்களை எதிர்கொள்ளும் முறைகள் குறித்து வழிகாட்டி **(mentors)** பேசுவர். தற்போது, **5** மாணவர்கள் கொண்ட இரண்டு குழுக்கள் வெற்றிகரமாக இயங்குகின்றன.

Parents Corner



குழந்தைகள் நல்ல தொடுதல் மற்றும் கெட்ட தொடுதலின் வித்தியாசத்தை அறிந்திருப்பது அவசியம். இதைப் புரிந்துகொள்வது மெதுவான செயல்முறை தான், ஆனால் அவர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமானது.

நல்ல தொடுதல்:

தொடுதல் என்பது அன்பையும் பராமரிப்பையும் வெளிப்படுத்தும் ஒரு வழி. சரியான தொடுதல்கள் நம்மை பாதுகாப்பாகவும், அமைதியாகவும், நேசிக்கப்படுவதாகவும் உணர வைக்கின்றன.

எடுத்துக்காட்டுகள்: **இத்தகைய தொடுதல்கள் அன்பையும் பாதுகாப்பையும் அளிப்பவை; பயமோ, அசௌகரியமோ உண்டாக்காது.**

- பெற்றோரின் அணைப்பு
- சிறு வயதில் பெற்றோர் குளிப்பாட்டுவது
- ஆசிரியர் முதுகில் அன்புடன் தட்டுவது
- நண்பரின் ஹை-ஃபைவு / கைகுலுக்கல்
- சகோதரர்/சகோதரியின் அணைப்பு
- சாலையை கடக்கும் போது கைகளைப் பிடித்தல்
- பெற்றோரின் முன்னிலையில் மருத்துவர் பரிசோதனை செய்தல்











YOUNG ACHIEVERS



எம்.வி.தன்யா (சேலம்) 4ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றதற்கான முதல் பரிசு.



நந்தித்தாஸ்ட்ரீ காஞ்சிவரம் உலகசாதன



ெலினா. ஏ திருவள்ளூர் நிறுவனர் தினக் கோப்பை – யோகா போட்டியில் இரண்டாம் இடம்.



அனன்யா (வேலூர்)– ரிலே.



மகாவர்ஷினி (ஈரோடு) மாவட்ட அளவிலான சதுரங்க போட்டி



ஷனசா (சென்னை)வளைய ஓட்டப் போட்டி.



அக்ஷரா (சென்னை) ஓட்டப்பந்தயம் முதல் பரிசு



கமலேஷ் ராஜ் (சென்னை) நீளம் தாண்டுதல் முதல் பரி



பிரிதிகா (சென்னை) ஸ்கிப்பிங் முதல் பரிசு.

YOUNG ACHIEVERS



ரெய்ன் தவான் (திண்டுக்கல்) இந்தியா வரைபட அலங்காரப் போட்டியில் முதல் பரிசு



அனன்யா ஸ்ரீ (திருவள்ளூர்) டேபிள் டென்னிஸ் போட்டியில் வெற்றியாளர்.



லிதீஸ் (தர்மபுரி) பள்ளி அளவிலான கல்வி தின பேச்சுப் போட்டி.



பிரார்த்தனா (தர்மபுரி) பள்ளி அளவிலான கல்வி தின பேச்சுப் போட்டி.



ெலினா (திருவள்ளூர்) மாநில அளவிலான யோகா போட்டியில் முதல் இடம்.



நித்திக் (நாமக்கல்) பேச்சுப் போட்டி – முதல் பரிசு.



வர்ஷினி (திருவள்ளூர்) கராத்தே போட்டி.

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!